REFERENCE COPY
TAMIL NADU LEGISLATURE
25 NOV 1982
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1982 மார்ச் 16.

பங்குனி 3, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.''

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கிழக்கு முகவை மாவட்டத்தில் முந்திரி தொழிற்சாலை.

*வினா எண். 477—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிழக்கு முகவை மாவட்டத்தில் முந்திரி ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு முகவை மாவட்டத்தில் வனத் துறையைச் சார்ந்த காடுகளிலும், தனியார் துறையைச் சார்ந்த காடுகளிலும் அதிகமான அளவுக்கு முந்திரி பயிரிடப்படுவதால், அரசு அதற்கான தொழிற்சாலை அமைப்பதைப் பற்றி மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே கிழக்கு மாவட்டத்தில் இரண்டு முந்திரி ஆலைகள் இருக்கின்றன. ஒன்று, பெரியார் பெயரிலே அமைக்கப்பட்ட முந்திரி கூட்டுறவு தொழிற்சாலை. அடுத்து, திருப்பத்தூர் தாலுக்காவிலே மகிபாலன்பட்டியில் அமைக்கப்பட்ட மீனாட்சி முந்திரி தொழிற்சாலை. இரண்டும் கிழக்கு முகவை மாவட்டத்தில் இயங்கிக் கொண்டு வருகின்றன. அவைகளுக்குப் போதுமான முந்திரி பருப்பு அங்கே உற்பத்தியாகின்ற காரணத்தினால், வேறு முந்திரி ஆலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் கடற்கரை 30 மைல்களுக்கு இடையில் இருக்கின்ற காரணத்தினால், வனத் துறையால் முந்திரி அதிக அளவிலே பயிரிடப்படுகின்றது. இதுவரை கேரளாவிற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள வியாபாரிகள் தயவினால் முந்திரிக்கு விலை கிடைக்கின்றது. இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற ஆலைகளில் முந்திரி எண்ணை உற்பத்தி, முந்திரியைப் பதப்படுத்துதல் செய்யப்படுகின்றதா? இன்னும் அதிகமான அளவுக்கு இது விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இரண்டு நிறுவனங்களும், முந்திரி பருப்பு முந்திரி எண்ணை ஆகியவைகளை உற்பத்தி செய்கின்றது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு முகவை மாவட்டத்தில் செம்மண் கலந்த மணற்பாங்கான பூமியாக இருப்பதால், முந்திரியைப் பயிரிடுவதற்கு வசதியாக இருக்கின்றது. எனவே, இன்னும் அபிவிருத்தி செய்யும் முறையில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைச் சொல்வதோடு, இப்போது எத்தனை ஏக்கரில் பயிரிடப்பட்டு வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் எவ்வளவு ஏக்கர்கள் பயிரிடப்படுகின்றது என்பதற்கான விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், வருகின்ற ஐந்தாண்டு காலத்தில், ஏற்கனவே ஒரு 10 நாட்களுக்கு முன் ஒரு கேள்விக்கு விடையளித்தபோது குறிப்பிட்டதைப்போல், 37 கோடி ரூபாயில் உலக வங்கியின் உதவியோடு, ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இதை நிறைவேற்றுகின்றபோது, இராமநாதபுரம் மாவட்டத்திலும் இது விரிவுபடுத்தப்படும்.

1982 மார்ச் 16]

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு முந்திரி உற்பத்தி செய்வதை அடுத்த மாநிலத்தில் வாங்கிச் செல்வதை தடை செய்யப்படுமா? இங்கு கிடைக்கின்ற முந்திரியை அரசாங்கமே, கூட்டுறவுத் துறை மூலம் அதைக் கொள்முதல் செய்து, முறையாக முந்திரி ஆலைகளுக்கு விநியோகம் செய்யுமா? அதோடு, மூடிக் கிடக்கின்ற முந்திரி ஆலைகளை அரசே ஏற்று நடத்துமா? முந்திரிக் கழகத்தை உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், இங்கே உற்பத்தியாகும் முந்திரியை இங்கே உள்ள தொழிற்சாலைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று, தொழிற்சாலை முனைவர்கள் அரசுக்கு ஒரு மனு அளித்திருக்கிறார்கள். அதன்மீது அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்தும் திட்டம்.

*வினா எண். 478—திரு. ப. தீர்த்தராமன்; திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மற்றும் போரூரில் உள்ள கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அடையார் மற்றும் போரூரில் மூடப்பட்டு இருக்கும் கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற்சாலையை தொழிற் கூட்டுறவு சங்கமாக நடத்த அரசின் அனுமதி கேட்டு அதன் தொழிலாளர்களிடமிருந்து வந்துள்ள மனு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் போரூரில மூடப்பட்டிருக்கும் கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்துவதற்கு, இதுவரை அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS